[2004 ஜூலை 31

114—

கால்நடை கிளை மருத்துவமனை

***20970—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, எறும்பூரில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

திரு. பி.எஸ். அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்று சொன்னார்கள். ஆனால், சேத்தியாத்தோப்பிலிருந்து கம்மாபுரம் வரை சுமார் 16 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இந்த இரண்டு ஊர்களுக்கும் இடையில் இருக்கின்ற எறும்பூர் கிராமத்தைச் சுற்றி சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அங்கே கால்நடை கிளை நிலையம் அமைத்துக் கொடுத்தால், எறும்பூர், சின்ன நற்குணம், நெல்லிக்கொல்லை, குறிஞ்சிக்கொல்லை, மதிவாணமேடு, ஆனைவாரி, அம்மன்குப்பம், கத்தாழை, முத்துகிருஷ்ணாபுரம், மணக்காடு, நல்லதண்ணீர்குளம் ஆகிய பல்வேறு கிராமங்களிலுள்ள கால்நடைகள் பயனடையும். கால்நடை கிளை நிலையங்கள் அமைப்பதற்கு விதிகளில் இடமில்லை என்றாலும், சிறப்பு நேர்வாக தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அம்மா அவர்களிடத்திலே சொல்லி விதிகளைத் தளர்த்தி, கால்நடைகளைக் காப்பாற்ற முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சேத்தியாத்தோப்பிலிருந்து கம்மாபுரம் வரை 16 கிலோ மீட்டர் தூரம் என்றும், இந்த இரண்டு ஊர்களுக்கும் இடையில் இருக்கின்ற எறும்பூர் கிராமத்தைச் சுற்றி சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள்

2004 ஜூலை 31]

இருக்கின்றன என்றும் சொன்னார்கள். அங்கே கால்நடை கிளை நிலையம் அமைத்துக் கொடுத்தால் எறும்பூர், சின்ன நற்குணம், நெல்லிக்கொல்லை, குறிஞ்சிக்கொல்லை, மதிவாணமேடு, ஆனைவாரி, அம்மன்குப்பம், மேல்பழையமாதேவி, கீழ்பழையமாதேவி, கத்தாழை, முத்துகிருஷ்ணாபுரம், மணக்காடு, நல்லதண்ணீர்குளம் ஆகிய பல்வேறு கிராமங்களிலுள்ள கால்நடைகள் பயனடையும் என்றும் சொன்னார்கள். கால்நடை கிளை நிலையங்கள் அமைப்பதற்கு விதிகளில் இடமில்லை என்றாலும், சிறப்பு நேர்வாக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே சொல்லி, விதிகளைத் தளர்த்தி, கால்நடைகளைக் காப்பாற்றுவதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, கிளை நிலையம் அமைப்பதற்கு இந்த நிதியாண்டில் நிதிநிலைமையைச் சீர்செய்து அம்மா அவர்கள் கொடுத்தால், உடனடியாக அவர்களுக்கு அங்கே கிளை நிலையம் அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அருள்.

திரு. பி.எஸ். அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தில், நல்லதொரு பதிலைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் கோட்டத்திற்கு இந்த ஆண்டு 250 பேருந்துகள் புதியதாக வாங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இலாகாவையே மாற்றுகிறீர்கள்.

வினா எண் 115, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

115—

உயிரியல் பூங்கா

***10585—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—